நகராட்சி நிர்வாகம்,

திருச்செந்தூர் -628215

நாள்: 17.10.2022

சாதாரணக்கூட்டம்

அன்புடையீர் வணக்கம்,

திருச்செந்தூர் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் 21.10.2022 தேதி வெள்ளி கிழமை, பிற்பகல் 03.00 மணிக்கு நகர் மன்ற கூட்ட அரங்கில் வைத்து தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது. அதுசமயம் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

தலைவர்

திருச்செந்தூர் நகராட்சி

பொருள் எண். 01

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், கீழத்திருச்செந்தூர் கிராமம், புல எண்கள் 613/4ல் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு மேற்கண்ட நிலத்தில் 0.02.14 (சென்ட் 5.30) ஏர்ஸ் நிலத்தினை மட்டும் நிலமாற்றம் செய்வது தொடர்பாக வட்டாட்சியர், திருச்செந்தூர் அவர்களின் கடித ந.க.எண். அ1/4616/2022, நாள். 15.09.2022 அன்று பெறப்பட்ட கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

அலுவலக குறிப்பு :-

மேற்படி கோரப்பட்டுள்ள இடமானது நகராட்சிக்கு பாத்தியப்பட்ட நிலம் இல்லை என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தீர்மானம் எண். 164

இந்த நிலம் நகராட்சிக்கு சொந்தமானத என வருவாய் துறையை அனுகி உறுதி செய்ய தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 02

திருச்செந்தூர் நகராட்சி 10 வது வார்டு உறுப்பினர் திருமதி. செ. அர்ச்சனா அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. பாரதியார் தெரு பகுதிகளில் உள்ள 3 பாலங்களை சீரமைத்து தடுப்பு சுவர் அமைத்து தர கேட்டல்.

2. திருச்செந்தூர் முதல் பரமன்குறிச்சி மெயின் ரோட்டில் நெடுஞ்சாலைத்துறை புதிய சாலை அமைக்கும்போது சங்கிவிளை ஊர் நுழைவாயிலில் இருந்து சிவில் சப்ளை குடோன் வரைப்பட்ட பகுதியில் குடிநீர் விநியோகம் குழாய் உடைக்கப்பட்ட நிலையில் உள்ளது. உடைக்கப்பட்ட குழாயை புதுப்பித்து, குடிநீர் விநியோகம் வழங்க கேட்டல்.

3. திருச்செந்தூர் முதல் பரமன்குறிச்சி மெயின் ரோட்டில் சங்கிவிளை நுழைவாயில் அருகே இடது புறத்தில் பேருந்து நிறுத்தத்தில் பயணிகள் நிழற்குடை பழுதடைந்துள்ளதை புதுப்பிக்கவும், வலுதுபுறத்தில் புதியதாக நிழற்குடை அமைத்துத் தரவும் கேட்டல்.

4. பாரதியார் தெரு மற்றும் சங்கிவிளை குறுகிய தெரு பாதை பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைத்துத் தர கேட்டல்.

தீர்மானம் எண். 165

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 03

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்துர் வட்டம், திருச்செந்தூர் நகராட்சி புறம்போக்கு இடத்தில் அமைந்துள்ள பூங்காவை அம்பேத்கார் பூங்கா என பெயர் மாற்றம் செய்யவும், தமிழக அரசின் சார்பில் 1962 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட திருச்செந்தூர் டாக்டர். அம்பேத்கர் நினைவுப்பூங்கா என்கிற கல்வெட்டை அப்போதைய தமிழக உள்துறை அமைச்சர் தியாகி கக்கன் அவர்களால் திறந்து வைத்த கல்வெட்டை மீண்டும் பூங்காவில் அமைக்கவும் திரு. முரசு தமிழப்பன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, 65, வடக்குத் தெரு, நா.முத்தையாபுரம், நடுநாலுமூலைக்கிணறு என்பவரிடமிருந்து 17.09.2022ம் தேதி அன்று பெறப்பட்ட மனு மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

தீர்மானம் எண். 166

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 04

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சியில் 2017ம் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் கணினி பழுதுபார்த்தல் மற்றும் டோனர் நிரப்புதல் போன்ற பணிகள்மேற்கொள்ள திரு. ராஜகணேஷ் என்பவரால் வைப்புத் தொகையாக ரூ. 2000/- செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி காலங்கடந்த வைப்புத் தொகையினை திரும்ப செலுத்திட மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

தீர்மானம் எண். 167

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 05

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சியில் கட்டிட பணிகள் மற்றும் சாலை பணிகள் மேற்கொள்ள புதிய ஒப்பந்ததாரராக பதிவு செய்ய ஸ்ரீ பார்வதி முருகா கன்ஸ்ட்ரக்ஷன், 52, வடக்குத் தெரு, மூலைக்கரைப்பட்டி, திருநெல்வேலி, என்பவர் சொத்து மதிப்பு மற்றும் GST சான்றுடன் விண்ணப்பம் செய்துள்ளார். மேற்படி நபரினை நகராட்சியில் புதிய ஒப்பந்ததாரராக பதிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

தீர்மானம் எண். 168

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 06

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சியில், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 5990/2022/SBM, நாள். 11.04.2022 ன் படி, தூய்மை இந்தியா 2.O நகர்புற 2021-22 திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிக்கு பேருந்துநிலையம் அருகில் பொதுக்கழிப்பிடம் பணி தேர்வு செய்யப்பட்டு, ரூ. 36.28 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு , பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. சில நிர்வாக காரணங்களினால் மேற்படி பணியினை மேற்படி இடத்தில் கட்டுவதற்கு இயலவில்லை. எனவே மேற்படி பொதுக்கழிப்பிடத்தினை சர்வே எண். 601 (எடிசன் மருத்துவமனை அருகில்) மாற்றியமைத்து கட்டுவதற்கு மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

தீர்மானம் எண். 169

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 07

திருச்செந்தூர் நகராட்சியில் சுனாமி நகர் முதல் தெரு பகுதியில் பள்ளமான இடத்தில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி விடுவதால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதால் அப்பகுதி பொதுமக்கள் மிகுந்த சிரமப்படுவதாலும் தற்பொழுது வடகிழக்கு பருவ மழை தொடங்க இருப்பதாலும் அப்பகுதி பொதுமக்களின் நலன் கருதியும் பொதுசுகாதாரம் கருதியும் பள்ளமான பகுதியில் GSB பயன்படுத்தி நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திட, தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.10.00இலட்சத்திற்கு, பணி மேற்கொள்ளவும், மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

தீர்மானம் எண். 170

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 08

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தூத்துக்குடிஅவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். அ2/1785/2022, நாள். 18.05.2022ன் படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021 – 2022 ன் கீழ் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சி, வார்டு எண். 23 தோப்பூர் புதுக்காலனி (மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி) பின்புறம் புதிய நியாய விலைக் கட்டிடம் கட்டுதல் பணி செய்திட கீழ்கண்டவாறு ரூ.15.50/- க்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது 2022-23வது வருட விகித அட்டவணையின் படி சரக்கு மற்றும் சேவை வரி 12% லிருந்த 18% ஆக உயர்த்தப்பட்டுள்ளது. எனவே தற்போது உள்ள விகித அட்டவணையின் அடிப்படையில் கூடுதல் தொகையினை பொதுநிதியிலிருந்து செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு.

வ. எண்.	பணிகள் விபரம்	சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பரிந்துரை செய்த தொகை (ரூ. இலட்சத்தில்)	நிர்வாக அனுமதி வழங்கப்படும் தொகை (ரூ. இலட்சத்தில்)		
			சட்டமன்ற உறுப்பினர் நிதி	ஊராட்சி பொது நிதி	மொத்தம்
செயலாக்க அலுவலர் – ஆணையாளர், திருச்செந்தூர் நகராட்சி					
1.	திருச்செந்தூர் நகராட்சி, வார்டு -23 தோப்பூர் புதுக்காலனி (மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி) பின்புறம் புதிய நியாயவிலைக்கட்டிடம் கட்டுதல்.	13.25	13.25	2.25	15.50
	மொத்தம்	13.25	13.25	2.25	15.50

அலுவலக குறிப்பு :-

வார்டு எண். 23 தோப்பூர் புதுக்காலனி (மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி) பின்புறம் புதிய நியாய விலைக் கட்டிடம் கட்டுதல் பணி செய்திட 2022-23வது வருட விகித அட்டவணையின் அடிப்படையில் கூடுதல் தொகையினை பொதுநிதியிலிருந்து செலுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண். 171

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 09

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் மின்னஞ்சல் நாள். 18.10.2022ல் தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் நகராட்சி 2022-2023 ஆம் ஆண்டு பொதுநிதியின் கீழ் ரூ. 113.32 இலட்சத்திற்கு 821 எண்ணம் தெரு மின் விளக்குகளை LED விளக்குகளாக மாற்றம் செய்வதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி மதிப்பீட்டில் CFL – 575 எண்ணம் மற்றும் Tubelight - 246 எண்ணம் மின் விளக்கினை எல்.இ.டி (LED) தெரு மின் விளக்குகளாக மாற்றுவதற்கும், மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

அலுவலக குறிப்பு:

ரூ. 113.32 இலட்சத்திற்கு 821 எண்ணம் தெரு மின் விளக்குகளை LED விளக்குகளாக மாற்றம் செய்வதற்கும், மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண். 172

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 10

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சி, சுப்பிரமணியபுரம் நாவல்பழ சாலையில் சுப்பிரமணியபுரம் நோக்கி செல்லும் தெற்கு பாதையில் நுழைவாயில் அமைப்பதற்கு ஊர் பொதுமக்கள் சார்பாக தலைவர், அருள்தரும் ஸ்ரீ மாரியம்மன் திருக்கோவில், சுப்பிரமணியபுரம் நாடார் தெரு, அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

தீர்மானம் எண். 173

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 11

மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியரகம், தூத்துக்குடி அவர்களின் கடித ந.க.எண். டி3/3477/2010, நாள். 05/2022ல், திருச்செந்தூர் வட்டம், கீழத்திருச்செந்தூர் கிராமம் புல எண் 613/3ல் 0.02.5 ஹெக்டர் நிலம் சர்க்கார் புறம்போக்கு, ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட நிலம் என்பதால் திருச்செந்துர் ஊராட்சி ஒன்றியம் மூலம் வணி கட்டிடம் கட்ட வேண்டும் என ஒன்றிய குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இதே இடத்தை திருச்செந்தூர் நகராட்சி வாகன நிலையம் அமைக்க வழங்க இயலாது என திருச்செந்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் தெரிவித்துள்ளபடியால், மேற்படி நிலம் திருச்செந்தூர் நகராட்சிக்கு தேவைதானா என்பதற்கும், மேற்படி நிலத்திற்குரிய நில மதிப்புத் தொகை செலுத்திட சம்மதமா என்ற விபரத்திற்கும் அறிக்கை அனுப்பிட கோரப்பட்டுள்ளது. எனவே மேற்படி நிலம் தேவை என்பதால், மேற்படி இடத்திற்கு மதிப்பீடு செலுத்திட மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

தீர்மானம் எண். 174

தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண். 12

திருச்செந்தூர் நகராட்சியில் 15வது நிதிக்குழு மானிய திட்டம் 2022 -23 (Tied Grant) திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பணிக்கு 22.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

வ.எண்.	பணி விபரம்	மதிப்பீடு (லட்சத்தில்)	தேஜா ஸ்டாக் ஒப்பந்தகாரர் மேலத்திருச்செந்தூர்	திரு. சிவராஜன், ஒப்பந்தகாரர், திருச்செந்தூர்
1.	ஆலந்தலை வளமீட்பு பூங்காவில் நகர்புற காடுகள் அமைத்தல்	2.59	**1.97% கூடுதல்**	**0.17% குறைவு**

அலுவலக குறிப்பு

குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சிவராஜன், திருச்செந்தூர் நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் எண். 175

தீர்மானிக்கப்பட்டது.

(ஓம்) திருமதி. ர.சிவஆனந்தி,

தலைவர்

திருச்செந்தூர் நகர் மன்றம்

/உண்மை நகல்/

ஆணையாளர்

திருச்செந்தூர் நகராட்சி